# தஞ்சாவூர் மாநகராட்சி

| Date of Meeting | Serial Number and subject in the Agenda ( MEETING) | | Decision of the City Corporation |
|---|---|---|---|
| 27.06.2019 | 1. | இம்மாநகராட்சியின் ஆணையாளர், மாநகராட்சி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் மாநகர்நல அலுவலர் ஆகியோர்களின் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல், மே–2019ம் மாதங்களின் நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>பதிவு செய்யலாம். | பதிவு செய்யப்பட்டது |
| 27.06.2019 | 2. | அரசு ஆணை எண்.G.O.(D) No.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME-I) துறை, நாள் 22.02.2019–ன்படி திருமதி பு.ஜானகி இரவீந்திரன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களை தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ள அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.2197/2019/சி1) | பதிவு செய்யப்பட்டது |
| 27.06.2019 | 3. | தமிழக அரசு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அகவிலைப்படியினை 01.01.2019 முதல் 9 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்வு செய்து உத்தரவிடப்பட்டுள்ள அரசாணை எண்.151 நிதி (படிகள்) துறை, நாள் 20.05.2019 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.11573/2016/சி2) | பதிவு செய்யப்பட்டது |
| 27.06.2019 | 4. | தமிழக அரசு மாநகராட்சி ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அகவிலைப்படியினை 01.01.2019 முதல் 9% சதவீதத்திலிருந்து 12% சதவீதமாக உயர்வு செய்து உத்தரவிடப்பட்டுள்ள அரசாணை எண்.154 நிதி (ஓய்வூதியம்) நாள் 20.05.2019 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.5449/2018/பி2) | பதிவு செய்யப்பட்டது |
| 27.06.2019 | 5. | இம்மாநகராட்சியின் 2018–2019ம் நிதி ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கலாம். | பதிவு செய்யப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.4016/2019/சி2) | |
| 27.06.2019 | 6. | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான சிவகங்கை பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் மான்களுக்கான ஆயுள் காப்பீடு 2019–2020ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்கவும், ஆண் மான்கள் 12 எண்ணிக்கையும், பெண் மான்கள் 26 எண்ணிக்கையும் கூடுதல் 38 மான்களுக்கான ஆயுள் காப்பீட்டு தொகை ரூ.37,949/– ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கவும் முன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை ஏற்று அனுமதி வழங்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு :<br>முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதனை மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2056/2009/எம்சிஏ5) | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 7. | தஞ்சாவூர் மாநகராட்சி பிரதி மாதம் ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் GST மற்றும் வரி இல்லா இனங்கள் தலைப்பில் வரப்பெறும் GST அனைத்தும் அந்த அந்த மாதம் 5–ம் தேதி அரசு தலைப்பில் செலுத்தவும், தொடர்ந்து 10ம் தேதிக்குள் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யவும் பணிகள் மேற்கொண்ட வகையில் தணிக்கையாளர் திரு ஆர்.ரவிச்சந்திரன், வருமான வரி மற்றும் சரக்கு சேவை வரி தணிக்கையாளர் அவர்களுக்கு அவர் கோரியுள்ள தொகை ரூ.34,000/–ஐ வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 8. | தஞ்சாவூர் நகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதற்கு முன்னர் சென்னை உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை இயக்குநரால் ஒய்வூதிய முன் மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு ஒய்வூதிய பயன்கள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் சென்னை உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால் நேரடியாக சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.<br>ஆனால் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு 19.02.2014 முதல் பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் பணியிடை காலமான பணியாளர்களுக்கு மாநகராட்சி நிர்வாகத்தாலேயே ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.23057/2014/மாநஅ2, நாள் 28.01.2015–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இயக்குநர் (நகராட்சி ஓய்வூதியம் மற்றும் சரிபார்ப்பு பிரிவு), உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.8000/நஒச(5)/2015, நாள் 30.03.2015–ன்படி தஞ்சை மாநகராட்சியில் 19.02.2014–க்கு பிறகு ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பயன்கள் அனுமதிப்பதற்கு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தஞ்சாவூர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>
அதன்படி இம்மாநகராட்சியில் 2019–2020ம் ஆண்டு ஒய்வு பெறும் மற்றும் பணியிடை காலமான பணியாளர்களுக்கு ஒய்வூதியம் மற்றும் குடும்ப ஒய்வூதியம் வழங்க அனுமதிப்பதற்கு ஏதுவாக, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, தஞ்சாவூர் அவர்களின் தணிக்கைச் சான்றின் அடிப்படையில் ஒய்வூதிய பயன்கள் / குடும்ப ஒய்வூதிய பயன்கள் அனுமதிப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5450/2018/பி2)
</td><td></td></tr>
<tr><td>27.06.2019</td><td>9.</td><td>
தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் வருகையை BIO-MATRICS SCANNER 2 எண்ணிக்கை வாங்கிட மாமன்றத் தீர்மான எண்.45, நாள் 27.05.2017–ன்படி அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி விபரம்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>விக்னேஷ் கம்ப்யூட்டர்ஸ், 110, எச் ரெங்கம் வணிக வளாகம், இந்தியன் வங்கி எதிரில், சுந்தரம் நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர்–613 004. (போன்–9965518358)</td><td>2 எண்ணிக்கை</td><td>49,000/–</td></tr>
<tr><td>2</td><td>மேக்ஸிமா கம்ப்யூட்டர்ஸ், 18ஏ/3, சீனிவாசம் பிள்ளை ரோடு, ஸ்ரீ அங்காளம்மன் வணிக வளாகம், சாந்தபிள்ளை கேட், தஞ்சாவூர் – 613 001. (போன்9791606159)</td><td>2 எண்ணிக்கை</td><td>44,600/–</td></tr>
<tr><td>3</td><td>சிக்மா கம்ப்யூட்டர்ஸ், 85 ஜே.எம்.ஆர். முதல் தளம், கோர்ட் ரோடு, ஆத்துப்பாலம், தஞ்சாவூர்– 613 001 (போன் 9965598358)</td><td>2 எண்ணிக்கை</td><td>41,000/–</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த சிக்மா கம்ப்யூட்டர்ஸ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தொகை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.6588/2018/சி2)
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>27.06.2019</td><td>10.</td><td>
இம்மாநகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு இருமுறை மட்டுமே Fillup செய்யக்கூடிய விலை குறைந்த டோனர்கள் 15 எண்ணிக்கை விநியோகம் செய்திட உள்ளூர் நிறுவனங்களில் இருந்து 14.02.2019 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் வருமாறு
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.<br>எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி<br>இன விபரம்</th><th>விலைப்புள்ளி<br>விபரம்</th></tr>
<tr><td>1</td><td>M/s. RGS Infotech, 104, கோடம்பாக்கம் ரோடு,<br>மேற்கு மாம்பலம், சென்னை – 600 033</td><td>இருமுறை மட்டுமே Fillup<br>செய்யக்கூடிய டோனர்கள்</td><td>730/–<br>(ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>2</td><td>M/s. Cashew Systems, 230, எம்.ஐ.ஜி. மருதம்,<br>புதிய வீட்டு வசதி வாரியம், தஞ்சாவூர்</td><td>இருமுறை மட்டுமே Fillup<br>செய்யக்கூடிய டோனர்கள்</td><td>610/–<br>(ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>3</td><td>M/s. CMS Computers, 52, ஆர்.ஆர்.காலனி,<br>திருச்சி – 620 011</td><td>இருமுறை மட்டுமே Fillup<br>செய்யக்கூடிய டோனர்கள்</td><td>660/–<br>(ஒன்றுக்கு)</td></tr>
</table>
மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் கண்டுள்ள மெசர்ஸ். Cashew Systems, தஞ்சாவூர் அவர்கள் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்கவும், இதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலகக்குறிப்பு :</u>
1) வரிசை எண்.2–ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்கவும், பொது நிதியில் இதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2019</td>
<td>11.</td>
<td>
இம்மாநகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு இருமுறை மட்டுமே Fillup செய்யக்கூடிய டோனர்கள் 15 எண்ணிக்கை விநியோகம் செய்திட உள்ளூர் நிறுவனங்களில் இருந்து 05.04.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் வருமாறு
<table>
<tr><th>வ.<br>எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி<br>இன விபரம்</th><th>விலைப்புள்ளி<br>விபரம்</th></tr>
<tr><td>1</td><td>M/s. RGS Infotech, 104, கோடம்பாக்கம் ரோடு,<br>மேற்கு மாம்பலம், சென்னை – 600 033</td><td>இருமுறை மட்டுமே Fillup<br>செய்யக்கூடிய டோனர்கள்</td><td>650/–<br>(ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>2</td><td>M/s. Cashew Systems, 230, எம்.ஐ.ஜி. மருதம்,<br>புதிய வீட்டு வசதி வாரியம், தஞ்சாவூர்</td><td>இருமுறை மட்டுமே Fillup<br>செய்யக்கூடிய டோனர்கள்</td><td>625/–<br>(ஒன்றுக்கு)</td></tr>
<tr><td>3</td><td>M/s. CMS Computers, 52, ஆர்.ஆர்.காலனி,<br>திருச்சி – 620 011</td><td>இருமுறை மட்டுமே Fillup<br>செய்யக்கூடிய டோனர்கள்</td><td>665/–<br>(ஒன்றுக்கு)</td></tr>
</table>
மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் கண்டுள்ள மெசர்ஸ். Cashew Systems, தஞ்சாவூர் அவர்கள் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்கவும், இதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1) வரிசை எண்.2–ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்கவும், பொது நிதியில் இதற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். /2018/பி1)</td><td></td></tr>
<tr><td>27.06.2019</td><td>12.</td><td>இம்மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களில் பணி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதி, அதற்கான வட்டி தொகை மற்றும் மாநகராட்சி பங்களிப்பு தொகை, மேலும் பணியிடை இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு சிறப்பு சேமநல நிதி அதற்கான வட்டி தொகை வழங்கிட ஏதுவாக 2019–2020ஆம் நிதியாண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.5 இலட்சம் பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3471/2013/பி4)</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>27.06.2019</td><td>13.</td><td>இம்மாநகராட்சி வருவாய் பிரிவு மற்றும் பொது பிரிவிற்கு தேவையான சொத்து வரி, குடிநீர் வரி, பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் தொழில் வரி ரசீதுகள் அச்சடித்து சப்ளை பெறவும், நிர்வாக நலன் கருதியும், அவசர அவசியத்தின் காரணமாக கீழ்கண்ட பொருட்கள் சப்ளை பெறுவதற்கு மாமன்ற பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><td>1</td><td>Log Book</td><td>100 (1 Year)</td></tr><tr><td>2</td><td>Cash Book</td><td>3</td></tr><tr><td>3</td><td>Name Transfer Register</td><td>5</td></tr><tr><td>4</td><td>Pension Register</td><td>20</td></tr><tr><td>5</td><td>A4 Sheet</td><td>200 Ream</td></tr><tr><td>6</td><td>Service Request Register</td><td>50,000</td></tr></table>மேற்படி பொருட்கள் பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) அனுமதி வழங்கலாம்.<br>2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அனுமதி பெற்று சப்ளை பெற உத்தரவு வழங்கிடவும் அனுமதி வழங்கலாம். அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.7432/2019/டி1)</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

**27.06.2019** | **14.** | அனுமதிக்கப்பட்டது

இம்மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டத்திற்கு பயன்படுத்த Jet Rodding Machine (6000 லிட்டர் கொள்ளளவு) வாகனம் ஒன்று வாங்குவதற்கு 13.08.2018 அன்று நடைபெற்ற 7வது மாநில உயர்மட்ட குழுவில் ஒப்புதல் வழங்கப்பட்டு (Agenda 10-2A) மேற்படி பணிக்கு மாமன்ற தீர்மான எண்.317, நாள் 30.01.2019–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 26.12.2018 அன்று ஒழிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s. S.P.Builders, சென்னை | 51,30,000.00 | மதிப்பீட்டு தொகையை விட 4.70 % அதிகம் |
| 2 | M/s. Vishnu Infrastructure, சூலூர் | 53,74,600.00 | மதிப்பீட்டு தொகையை விட 9.69 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக அளித்துள்ள M/s. S.P.Builders, சென்னை என்ற நிறுவனத்தினை மேலும் விலை குறைப்பு செய்ய இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.9964/2015/எம்சிஇ1, நாள் 06.06.2019–ல் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து கீழ்கண்டவாறு விலை குறைப்பு செய்து ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s. S.P.Builders, சென்னை<br>கடிதம் எண். இல்லை, நாள் 15.3.19 | 48,95,000.00 | 0.10 % மதிப்பீட்டு தொகையை விட குறைவு |

மேற்படி விலை குறைப்பு செய்து கடிதம் வழங்கிய M/s. S.P.Builders, சென்னை நிறுவனத்தின் மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவாக வழங்கி உள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) குறைவாக விலைக்குறைப்பு மதிப்பீட்டு தொகையைவிட 0.10% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. S.P.Builders, சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்கண்ட பணிக்கான செலவினை (GOI–35%, State Share-55%, ULB Share-10%) தூய்மை இந்திய திட்ட நிதியில் இருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.9964/2015/எம்சிஇ1)

**27.06.2019** | **15.** | அனுமதிக்கப்பட்டது

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2, பிளாக் எண்.3, புல எண்.6/2–ல் அமைந்துள்ள ஸ்ரீநகர் (ஆவுசாகிப் தோட்டம்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.6971/2018/எம்சிஎப்1, நாள்

| | | | |
|---|---|---|---|
| | | 21.08.2018–ன்படி வளர்ச்சிக் கட்டணம் ரூ.1,06,30,000/– இம்மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி நிதியின் மனைப்பிரிவிற்கு பாதாள சாக்கடை பிரதான குழாய் அமைக்கும் பணிக்கு செலவிட மாமன்ற தீர்மான எண்.251, நாள் 30.10.2018 அனுமதி பெறப்பட்டது.<br>எனவே மேற்படி நிதியில் இருந்து ஸ்ரீநகர் மனைப்பிரிவிற்கு பாதாள சாக்கடை பிரதான குழாய் அமைக்கும் பணிக்கு 15.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மாலை மலர் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணம் ரூ.5,358/–ஐ வழங்க கோரி மாலை மலர் நாளிதழ், தஞ்சாவூர் என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>மேற்கண்ட தொகையினை மாலைமலர் நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) வளர்ச்சிப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டுள்ளதால் விளம்பர செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் முன் அனுமதி பெற்று விளம்பர கட்டண தொகை வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.13498/2018/எம்சிஇ1) | |
| 27.06.2019 | 16. | இம்மாநகராட்சிக்கு CGF/O & M GFF திட்ட நிதியின் கீழ் வார்டு எண்.30 சாலைக்கார தெரு சமுத்திரம் ஏரி அருகில் புதிய பாலம் மற்றும் சாலைகள் அமைக்கும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.316, நாள் 30.01.2019–ன்படி அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணம் ரூ.34,913/–ஐ வழங்கக்கோரி M/s. AD VISTAA, சென்னை–05 என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் ரூ.34,913/–ஐ அங்கீகரிக்கவும், தொகையினை விளம்பர நிறுவனத்திற்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) திட்டப்பணிகளின் கீழ் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டுள்ளதால் விளம்பர செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) முன் அனுமதி பெற்று விளம்பர கட்டணம் வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.5097/2018/எம்சிஇ1) | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 17. | இம்மாநகராட்சிக்கு CGF/O&M GFF திட்ட நிதியின் கீழ் வார்டு எண்.30 சாலைக்கார தெரு சமுத்திரம் ஏரி அருகில் புதிய பாலம் மற்றும் சாலைகள் அமைக்கும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.316, நாள் 30.01.2019–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறாத நிலையில் மறு ஒப்பந்தப்புள்ளி 25.03.2019 அன்று கோரியதினை மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | விளம்பர கட்டணம் ரூ.59,378/—ஐ வழங்கக்கோரி M/s. MARK Media Communications, சென்னை—06 என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் ரூ.59,378/—ஐ அங்கீகரிக்கவும், தொகையினை விளம்பர நிறுவனத்திற்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) திட்டப்பணிகளின் கீழ் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டுள்ளதால் விளம்பர செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.5097/2018/எம்சிஇ1) | |
| 27.06.2019 | 18. | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு புதிதாக Jet Rodding Machine (6000 Litre கொள்ளளவு) வாகனம் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது 26788/பி3/2018, நாள் 29.10.2018—ன்படி ரூ.49.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. (GOI Share-35%, State Share 55% மற்றும் மாநகராட்சி பங்குத்தொகை 10%) மேற்படி வாகனம் வாங்குவதற்கு 26.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை மாநில அளவில் ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யவும், மாநில செய்தி மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணம் ரூ.71,820/—ஐ (ரூபாய் எழுபத்தி ஓராயிரத்தி எண்ணூற்றி இருபது மட்டும்) வழங்கக்கோரி M/s. MARK Media Communications, சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>மேற்கண்ட தொகையினை M/s. MARK Media Communications, சென்னை விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) திட்டப்பணிகளின் கீழ் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டுள்ளதால் விளம்பர செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் செலவு செய்ய அனுமதி வழங்கலாம்.<br>2) அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் முன் அனுமதி பெற்று விளம்பர கட்டண தொகை வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.9964/2018/எம்சிஇ1) | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 19. | தஞ்சாவூர் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 4 கணினி வரி வசூல் மையங்கள், 4 பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் மையங்கள் மற்றும் தற்போது அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகள் மற்றும் அதன் சார்பு உபகரணங்களை 2019—20ம் ஆண்டிற்கு பராமரிப்பு செய்யும் (கம்ப்யூட்டர்—55, பிரிண்டர் லேசர்—34, பிரிண்டர் டாட் மேட்ரிக்ஸ்—8, ஸ்கேனர்—4, லேப்டாப்—8) பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.00 (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 21.01.2019—ந் தேதிய மாமன்ற முன் அனுமதி பெறப்பட்டு 01.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/s. Cashew Systems, தஞ்சாவூர்</td><td>ரூ.5,02,672.00</td><td>0.11 % மதிப்பீட்டு தொகையை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s. R.G.S. Infotech, தஞ்சாவூர்</td><td>ரூ.5,06,280.00</td><td>0.61 % மதிப்பீட்டு தொகையை விட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Cashew Systems, தஞ்சாவூர் என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Cashew Systems, தஞ்சாவூர் என்ற நிறுவனத்தின் மதிப்பீட்டு தொகையைவிட 0.11% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் ஏற்கலாம்.<br>
3) மேற்கண்ட பணியினை பொது நிதி 2018–19ன் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>
4) மேற்கண்ட தொகை ரூ.6.00 இலட்சம் பொது நிதியில் செலவு செய்ய நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.15643/2018/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2019</td>
<td>20.</td>
<td>இம்மாநகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தஞ்சாவூர் அவர்களது கடிதம் எண்.F.TNJ0014/RM/DEE/TNPCB/TNJ/ROA/2018, நாள் 20.11.2018–ன்படி STP Inlet மற்றும் Outlet–ல் இருந்து வெளியேறும் கழிவு நீரை தங்கள் ஆய்வுக் கூடத்தில் பகுப்பாய்வு செய்ய ஆய்வுக் கட்டணம் ரூ.4,220/–ம், கடிதம் எண். F.TNJ0014/RM/DEE/TNPCB/TNJ/ROA/2018, நாள் 16.02.2019–ன்படி STP கட்டணம் ரூ.3,420/–ம், கடிதம் எண். F.TNJ0014/RM/DEE/TNPCB/TNJ/ROA/2019, நாள் 15.03.2019–ன்படி கட்டணம் ரூ.4,220/– மற்றும் கடிதம் எண். F.TNJ0502/GS/DEE/TNPCB/TNJ/2019, நாள் 26.03.2019–ன்படி Water Act மற்றும் Air Act Consent Fees ரூ.7,400/– ஆக கூடுதல் தொகை ரூ.19,260/–ஐ செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.19,.260/–ஐ மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தஞ்சாவூர் அவர்களுக்கு வரைவோலையாக செலுத்திடவும், மேற்படி செலவினத் தொகை ரூ.19,260/–ஐ (ரூபாய் பத்தொன்பதாயிரத்து இருநூற்றுஅறுபது மட்டும்) குடிநீர் திட்ட நிதியில் செலவு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>1) பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.19,260/—க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019—2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மேற்படி தொகை செலுத்தப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.320/2017/எம்சிஇ2) | |
| 27.06.2019 | 21. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தஞ்சாவூர் அவர்களது கடிதம் எண்.F.TNJ0014/RM/DEE/TNPCB/TNJ/ROA/2019, நாள் 07.06.2019—ன்படி STP Inlet மற்றும் Outlet—க்கான பகுப்பாய்வு கட்டணம் ரூ.4,220/—ஐ செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.4,220/—ஐ (ரூபாய் நான்காயிரத்தி இருநூற்றி இருபது மட்டும்) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தஞ்சாவூர் அவர்களுக்கு வரைவோலையாக செலுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட தொகை ரூ.4,220/—க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினை 2019—2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்கண்ட தொகைக்கு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மேற்படி தொகை செலுத்தப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.320/2017/எம்சிஇ2) | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 22. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு TN 49 AC 5412 குப்பை அள்ளும் வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.360, நாள் 31.10.2017—ன்படி (முன் அனுமதி நாள் 04.10.2017) நிர்வாக அனுமதி பெற்று 23.10.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ரூ.77,600/—ஐ குறைவான ஒப்பந்தப்புள்ளித் தொகையாக அளித்த M/s. ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி—8 நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.435, நாள் 30.11.2017—ன்படி (முன் அனுமதி நாள் 23.10.2017) 23.10.2017 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இந்நிலையில் தற்போது வாகனங்களுக்கு வேக கட்டுப்பாட்டு கருவி (Speed Controller) பொருத்துதல், பக்கவாட்டில் பாதுகாப்பு அரண்கள் (Side Safety Guards) அமைத்தல் மற்றும் பின்புறம் பம்பர் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டால் மட்டுமே தகுதிச்சான்று புதுப்பிக்கும் இயலும் என ஒட்டுநர் தனது 03.05.2019–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் மேற்படி வாகனம் ஏற்கனவே பழுது பார்க்கும் நிறுவனத்திடம் கோரி பெறப்பட்டதில் ரூ.17,110/– செலவினம் ஆகும் என தனது 09.05.2019–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.<br>எனவே மேற்படி வாகனத்திற்கு பழுதுகளை சீர் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கான கூடுதல் செலவினம் ரூ.17,110/–ஐ (ரூபாய் பதினேழாயிரத்து நூற்றுபத்து மட்டும்) அங்கீகரிக்கவும் மேற்படி பணி மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி செய்தால் கால விரயம் ஏற்படுவதை தவிர்க்க அதே ஒப்பந்ததாரரிடம் ஒப்படைத்து செய்து முடிக்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகளை சீர் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கான கூடுதல் செலவினம் ரூ.17,110/–க்கு (ரூபாய் பதினேழாயிரத்து நூற்றுபத்து மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.10176/2017/எம்சிஇ2) | |
| 27.06.2019 | 23. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு TN 49 BD 1873 டிப்பர் ஆட்டோ வாகனத்திற்கு பழுதுகளை சீர் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.136, நாள் 30.06.2017–ன்படி ரூ.59,800/–க்கு பழுதுகள் சீர் செய்ய நிர்வாக அனுமதி பெற்று 07.09.2017 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ரூ.63,346/–ஐ குறைவான ஒப்பந்தப்புள்ளித் தொகையாக அளித்த M/s. ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி–8 நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.489, நாள் 28.12.2017–ன்படி (முன் அனுமதி நாள் 05.12.2017) 05.12.2017 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது.<br>இந்நிலையில் தற்போது வாகனங்களுக்கு வேக கட்டுப்பாட்டு கருவி (Speed Controller) பொருத்தினால் மட்டுமே தகுதிச்சான்று புதுப்பிக்கும் நிலையில் உள்ளதால், மேற்படி கூடுதல் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் மேற்படி வாகனம் ஏற்கனவே பழுது பார்க்கும் நிறுவனத்திடம் கோரி பெறப்பட்டதில் கூடுதல் செலவினம் ரூ.4,956/–க்கு மேற்படி நிறுவனத்திடமிருந்து 09.05.2019–ம் தேதி விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br>எனவே மேற்படி வாகனத்திற்கு பழுதுகளை சீர் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கான கூடுதல் செலவினம் ரூ.4,956/–ஐ (ரூபாய் நான்காயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறு | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மட்டும்) அங்கீகரிக்கவும் மேற்படி பணி மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி செய்தால் கால விரயம் ஏற்படுவதை தவிர்க்க அதே ஒப்பந்ததாரரிடம் ஒப்படைத்து செய்து முடிக்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகளை சீர் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கான கூடுதல் செலவினம் ரூ.4,956/-க்கு (ரூபாய் நான்காயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறு மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019-2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.6379/2017/எம்சிஇ2) | |
| 27.06.2019 | 24. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனங்களுக்கு 2019-2020ம் ஆண்டிற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த வேண்டிய சாலை வரி, பசுமை வரி, சேவை வரி, தொழிலாளர் நலநிதி வரி, தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம், புகைச்சான்று கட்டணம் அனுமதி (Permit) கட்டணம் மற்றும் இதர வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து விதமான கட்டணங்களை அவ்வப்போது செலுத்தவும், மேற்கண்ட பொறியியல் பிரிவு வாகனங்களுக்கு காப்பீடு புதுப்பிக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.18,00,000/- மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பொறியியல் பிரிவு வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்தவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.18,00,000/-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019-2020 வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2167/2016/எம்சிஇ2) | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 25. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 AQ 5240 மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு ஸ்கார்ப்பியோ வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மேற்படி வாகனம் கொள்முதல் செய்த M/s. சிவா ஆட்டோமொபைல்ஸ் (பி) லிட்., திருச்சிராப்பள்ளி-9 நிறுவனத்திடமிருந்து மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி தொகையாக ரூ.76,837/- வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை சீர் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.76,837/-ஐ (ரூபாய் எழுபத்து ஆறாயிரத்து எண்ணூற்று முப்பத்து ஏழு மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.76,837/-க்கு (ரூபாய் எழுபத்து ஆறாயிரத்து எண்ணூற்று முப்பத்து ஏழு மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி பணிக்கு மேற்படி வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட கம்பெனியின் மூலம் பணி செய்தால் தரமாகவும், இரண்டு வருடங்கள் வரை எந்தவித பழுது பணிகளும் ஏற்படாது என்ற உத்திரவாதத்தின்பேரிலும் M/s. சிவா ஆட்டோமொபைல்ஸ் (பி) லிட்., திருச்சிராப்பள்ளி–9 நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9683/2018/எம்சிஇ2)</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2019</td>
<td>27.</td>
<td>இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 AQ 4594 மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு வாகனத்திற்கு புதிய மின்கலன் வாங்குவதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து 28.03.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விலைப்புள்ளிகள் அளிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளிகள் தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>M/s. சரவணன் பேட்டரி சென்டர், தஞ்சாவூர்</td><td>ரூ. 5,700/–</td></tr>
<tr><td>2.</td><td>M/s. கார்த்திக் பேட்டரி சென்டர், தஞ்சாவூர்</td><td>ரூ. 6,100/–</td></tr>
<tr><td>3.</td><td>M/s. தீன் பேட்டரி ஒர்க்ஸ், தஞ்சாவூர்</td><td>ரூ. 6,200/–</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட நிறுவனங்களின் குறைந்த விலைப்புள்ளியாக வரிசை எண்.1–ல் கண்டுள்ள M/s. சரவணன் பேட்டரி சென்டர், தஞ்சாவூர் என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.5,700/–ஐ மாமன்றம் ஏற்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–20 வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1796/2019/எம்சிஇ2)</td>
<td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27.06.2019</td>
<td>28.</td>
<td>தஞ்சாவூர் மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா 29.11.2017 அன்று நடைபெற உள்ளதால் மாண்புமிகு தமிழக முதல்வர், அனைத்து துறை அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை தர இருப்பதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வின்போது</td>
<td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>வழங்கப்பட்ட அறிவுரைகளின் பேரில், மழையினாலும், பாதாள சாக்கடைத் திட்ட பணிகள் மற்றும் குடிநீர் குழாய் பகிர்மான குழாய்கள் பதித்தல் ஆகியவற்றால் சேதமடைந்துள்ள நாஞ்சிக்கோட்டை சாலை, விளார் சாலை, அருளானந்த அம்மாள் நகர் பைபாஸ் சாலை, யாகப்பா நகர் சாலை, பாத்திமான நகர் சாலை, குந்தவை நாச்சியார் கலைக்கல்லூரி சாலை, அருளானந்த நகர் மற்றும் ஆர்.ஆர்.நகர் சாலை ஆகிய சாலைகளில் குண்டும், குழியுமாக உள்ளதால் போக்குவரத்து மற்றும் பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட சாலைகளை சீரமைக்கும் பணிக்கு (Phase-I) தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/–க்கு மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 28.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு 15.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர்</td><td>4,37,039.50</td><td>மதிப்பீட்டை விட 0.19 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு எல்.ராஜ்குமார் ராவ், தஞ்சாவூர்</td><td>4,42,634.00</td><td>மதிப்பீட்டை விட 1.08 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்ட பணிக்கான செலவினம் ரூ.5,00,000/–க்கு மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். செலவினை 2019–20 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் ஏற்கலாம்.<br>
3) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள மதிப்பீட்டை விட 0.19% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
4) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.15100/2017/எம்சிஇ3)</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2019</td>
<td>29.</td>
<td>தஞ்சாவூர் மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா 29.11.2017 அன்று நடைபெற உள்ளதால் மாண்புமிகு தமிழக முதல்வர், அனைத்து துறை அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை தர இருப்பதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வின்போது வழங்கப்பட்ட அறிவுரைகளின் பேரில், மழையினாலும், பாதாள சாக்கடைத் திட்ட பணிகள் மற்றும் குடிநீர்</td>
<td>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>குழாய் பகிர்மான குழாய்கள் பதித்தல் ஆகியவற்றால் சேதமடைந்துள்ள தென்கீழ் அலங்கம் சாலை, தெற்கலங்கம் சாலை, சீனிவாசபுரம் சாலை, நீதிமன்ற சாலை, ராசா மிராசுதார் அரசு தலைமை மருத்துவமனை சாலை, கொள்ளுப்பேட்டைத்தெரு, ஆபிரஹாம் பண்டிதர் சாலை, மிஷன் சர்ச் சாலை, வி.பி.கோவில் சாலை, கீழவாசல் கடைத்தெரு, CRC டெப்போ சாலை மற்றும் செக்கடித்தெரு சாலை ஆகிய சாலைகளில் குண்டும், குழியுமாக உள்ளதால் போக்குவரத்து மற்றும் பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட சாலைகளை சீரமைக்கும் பணிக்கு (Phase-II) தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5,00,000/–க்கு மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 28.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு 15.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர்</td><td>4,37,039.50</td><td>மதிப்பீட்டை விட 0.19 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு எல்.ராஜ்குமார் ராவ், தஞ்சாவூர்</td><td>4,42,634.00</td><td>மதிப்பீட்டை விட 1.08 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்ட பணிக்கான செலவினம் ரூ.5,00,000/–க்கு மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம். செலவினை 2019–20 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் ஏற்கலாம்.<br>
3) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள மதிப்பீட்டை விட 0.19% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஜி.செந்தில்குமார், தஞ்சாவூர் ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
4) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.15101/2017/எம்சிஇ3)</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2019</td>
<td>30.</td>
<td>அரசு முதன்மை செயலர் அவர்களின் 17.06.2019ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் மாநகராட்சிகள் / நகராட்சிகளில் பொது மக்களுக்கு செய்து தர வேண்டிய அடிப்படை வசதிகள் மேம்பாடு தொடர்பாகவும் மற்றும் குடிநீர் / மின் விளக்கு / பாதாள சாக்கடை தொடர்பாக பொது மக்களிடமிருந்து புகார் பெறுவது தொடர்பாகவும் மாநகராட்சி அலுவலகத்தில் கட்டணமில்லா தொலைபேசி (TOLL FREE No) இணைப்பு பெற்று பொது மக்களுக்கு விளம்பரபடுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே BSNL நிறுவனம்</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் கட்டணமில்லா தொலைபேசி இணைப்பு பெறவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.7464/2019/எம்சிஇ4) | |
| 27.06.2019 | 31. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 AQ 4594 மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு ஈப்பு வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் அவ்ஈப்பின் அங்கீகார டீலரான M/s. சிவா ஆட்டோமொபைல்ஸ் (பி) லிட்., நம்பர் 1 நாகை மெயின் ரோடு, தஞ்சாவூர் நிறுவனத்திடமிருந்து மேற்படி பணிக்கு ஒரே ஒரு விலைப்புள்ளி மட்டும் ரூ.74,449/– வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை சீர் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.74,449/–ஐ (ரூபாய் எழுபத்து நான்காயிரத்தி நானூற்றி நாற்பத்தி ஒன்பது மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.74,449/–ஐ (ரூபாய் எழுபத்து நான்காயிரத்தி நானூற்றி நாற்பத்தி ஒன்பது மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி வண்டியின் பழுது பார்த்தல் பணியின் தரத்தினை கருத்தில் கொண்டும், அவ்வண்டியின் அங்கீகார டீலராக கம்பெனி இருப்பதால் M/s. சிவா ஆட்டோமொபைல்ஸ் (பி) லிட்., நம்பர் 1 நாகை மெயின் ரோடு, தஞ்சாவூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5556/2019/எம்சிஇ5) | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 32. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு TN 49 BE 3659 காம்பாக்டர் வாகனத்திற்கு 1000–20 அளவு கொண்ட 7 எண்ணிக்கை புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் சப்ளை செய்யும் பணிக்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் M/s. பர்வின் பானு டயர்ஸ், VOC நகர், தஞ்சாவூர் நிறுவனத்திடமிருந்து குறைந்த விலைப்புள்ளி தொகையாக ரூ.1,36,500/– வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு 7 எண்ணிக்கை டயர்கள் மற்றும் டியூப்கள் சப்ளை செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,36,500/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து ஆராயிரத்தி ஐநாறு மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட வாகனத்திற்கு 7 எண்ணிக்கை டயர்கள் மற்றும் டியூப்கள் சப்ளை செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,36,500/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து ஆராயிரத்தி ஐநூறு மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) மேற்கண்ட பணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.5503/2019/எச்8) | |
| 27.06.2019 | 33. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 BJ 5052 மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு ஈப்பு வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கு அவ்வண்டி தயாரிப்பாளரின் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து M/s. Anaamalais TOYOTA, கும்பகோணம் நிறுவனத்திடமிருந்து மேற்படி பணிக்கு செலவின தொகையாக ரூ.29,504/– வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை சீர் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.29,504/–ஐ (ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரத்தி ஐநூற்றிநான்கு மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.29,504/–ஐ (ரூபாய் இருபத்தி ஒன்பதாயிரத்தி ஐநூற்றி நான்கு மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–20 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி பணிக்கு M/s. Anaamalais TOYOTA, கும்பகோணம் நிறுவனத்திற்கு தொகை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5226/2019/எம்சிஇ5) | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 34. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN 49 E 9666 மாநகராட்சி JCB வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கு அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற M/s. JAA Dealer, Srinivasapuram, தஞ்சாவூர் நிறுவனத்திடமிருந்து மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி தொகையாக ரூ.2,20,000/– வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை சீர் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.2,20,000/–ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட வாகனத்திற்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.2,20,000/—ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்தி இருபதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019—20 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5953/2019/எம்சிஇ5) | |
| 27.06.2019 | 35. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.49 புதிய திருவள்ளுவர் நகரில் உள்ள ஆழ்குழாய் கிணற்றின் நீர்மட்டம் குறைந்து போதிய குடிநீர் வசதி இல்லாத காரணத்தினால் இப்பகுதியில் புதிதாக ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்க, பொது மக்கள் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும் நிரந்தரமாக ஒரு புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8.50 (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8,50,000/—க்கு (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019—2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.240/2019/எம்சிஇ5) | அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப் பட்டது |
| 27.06.2019 | 36. | இம்மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.38 தோப்புக்குளம் பகுதியில் இயங்கி வந்த ஆழ்குழாய் கிணற்றில் நீர்மட்டம் மிகவும் குறைந்து விட்டதால் தோப்புக்குளம் மேல்கரை, கீழ்கரை, காவேரி நகர் மற்றும் மல்லிகா நகர் பகுதிகளில் வசிக்கும் சுமார் 300 குடும்பங்களுக்கு போதுமான குடிநீர் சீராக வழங்க இயலவில்லை. எனவே தற்போது இதற்கு மாற்று வழியாக மாநகராட்சி குடிநீர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்கள் நலன் கருதி நிரந்தரமாக ஒரு புதிய ஆழ்குழாய் கிணறு ஒன்று தோப்புக்குளம் பகுதியில் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8.50 (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>1) பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8,50,000/–க்கு (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை 2019–2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7376/2019/எம்சிஇ5) | |
| 27.06.2019 | 37. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.40 அருளானந்தபுரம் வாரி மற்றும் நடராஜபுரம் தெற்கு பகுதியில் இயங்கி வந்த ஆழ்குழாய் கிணற்றில் நீர்மட்டம் மிகவும் குறைந்து விட்டதால் மங்களபுரம், நடராஜபுரம் தெற்கு பகுதி மற்றும் 1, 2, 3 மற்றும் 4 குறுக்குத் தெருக்கள், அருளானந்தபுரம் வாரி தெரு பகுதிகளில் வசிக்கும் சுமார் 450 குடும்பங்களுக்கு போதுமான குடிநீர் சீராக வழஙக இயலவில்லை. எனவே தற்போது இதற்கு மாற்று வழியாக தனியார் குடிநீர் லாரி மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே பொது மக்கள் நலன் கருதி குடிநீர் விநியோகம் வழஙக ஏதுவாக நிரந்தரமாக வார்டு எண்.40 நடராஜபுரம் 2ம் தெருவில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8.50 லட்சம் (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–ஐ அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8.50 (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7171/2019/எம்சிஇ5) | அனுமதிக்கப்பட்டது |
| 27.06.2019 | 38. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36ல் செல்வம் நகரில் அமைந்துள்ள புதைவடிகால் நீருந்து நிலையத்தில் 1 எண்ணிக்கை 50 HP மின் மோட்டார், வார்டு எண்.22 காந்திஜி சாலையில் அமைந்துள்ள புதை வடிகால் நீருந்து நிலையத்தில் 1 எண்ணிக்கை 7 HP மின் மோட்டார் பழுதடைந்து விட்டமையால் இரண்டு மின் மோட்டார்களையும் பழுது நீக்கம் செய்து (காயில் கட்டுதல், கிணற்றிலிருந்து எடுத்தல், தண்ணீர் வெளியேற்றுதல், திரும்ப மோட்டார் இறக்குதல் உட்பட) தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு | அனுமதிக்கப்பட்டது |

தொகை ரூ.2.61 (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தோராயிரம் மட்டும்) இலட்சத்திற்கு அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.61 லட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்தி அறுபத்தோராயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2019–2020 வருடத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
